# எழுத்துப்பிரதி: மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் உள்ளடக்கங்கள் - பாரபட்சத்திலிருந்து பாதுகாப்பு

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் மிக நெருக்கமாகத் தொடர்புறுகின்ற மற்றுமொரு உரிமை பாரபட்சத்திலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான உரிமை ஆகும். பாரபட்சம் என்பது சில நபர்கள் அவர்கள் யாரென்ற அடையாளங்களின் காரணத்தினால் ஏனையோரைப் போல நடத்தப்படாமை ஆகும்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் காணப்படுகின்ற முக்கிய விதிகளில் ஒன்றாக, மதம் அல்லது நம்பிக்கை உள்ளடங்கலாக எந்தவொரு அடிப்படையிலும் பாரபட்சப்படுத்துவதற்கு அரசுகளுக்கு அனுமதியளிக்கப்படவில்லை என்பது அமைகின்றது. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் மற்றும் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரை 2 இந்த உரிமையை விவரிக்கிறது.

**குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம், உறுப்புரை 2, பந்தி *1***

*"இந்த உடன்பாட்டு ஒப்பந்தத்திற்கான அரசாளும் கட்சி ஒவ்வொன்றும் இவ்வொப்பந்தத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு மதிப்பளித்து தனது நியாயாதிக்கத்துக்கு அமைவாகத் தனது ஆள்புலத்தின்கண் உள்ள அனைவருக்கும் இனம், நிறம், பால், மொழி, சமயம், அரசியல் அல்லது பிற அபிப்பிராயம், தேசிய அல்லது சமூகத்தோற்றம், சொத்து, பிறப்பு அல்லது பிற அந்தஸ்த்து என்பவற்றினடிப்படையில் வேறுபாடு எதுவும் காட்டாது இவ்வுரிமைகளை உறுதிப்படுத்தும் பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றது."*

எனவே, மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையிலான பாரபட்சம் தடைசெய்யப்பட்டுள்ளது. பாரபட்சம் மீதானத் தடை பலவந்தப்படுத்தல் மீதானத் தடையை பிரதிபலிக்கிறது. அரசு தனது சொந்த செயல்களில் பாரபட்சத்தைத் தவிர்ப்பதற்கு மட்டுமல்லாமல், சமூகத்தில் இடம்பெறுகின்ற பாரபட்சத்தினைத் தடுப்பதற்கும் நிறுத்துவதற்கும் வினைத்திறனான முறையில் செயலாற்ற வேண்டுமெனவும் தேவைப்படுத்தப்படுகின்றது.

இருந்தபோதிலும், பாரபட்சமானது பெரும்பாலும் மிக பொதுவாக அனுபவிக்கப்படுகின்ற மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறலொன்றாக காணப்படுகின்றது என்பதுடன் இது ஒவ்வொரு மத மற்றும் நம்பிக்கைக் குழுவையும் பாதிக்கிறது.

சுவீடனில் யூதர்களுக்கு வேலை கிடைப்பதற்கு 26% ஆன குறைவான வாய்ப்பும், முஸ்லிம்களுக்கு 30% ஆன குறைவான வாய்ப்புமே காணப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். பணியாளர்கள் பணியிடங்களில் சிலுவை அல்லது ஹிஜாப் போன்ற மத அடையாளங்களை அணிவதற்கு தொழிற்தருனர்கள் தடைவிதிக்கின்றபோது அது பாரபட்சமாகுமா மற்றும் அது எப்போது பாரபட்சமாகும் என்ற கேள்வி முக்கியமானது என்பதுடன் இவ்விடயம் பல தடவைகள் ஐரோப்பிய நீதிமன்றங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் குழுவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

பாரபட்சம் பல வடிவங்களில் இடம்பெறலாம். சில நேரங்களில் ஏனைய மதங்களைவிட ஒரு மதத்திற்கு சார்பாக நடக்கின்ற அரசின் பக்கச்சார்பு என்ற வடிவத்தில் இடம்பெறலாம், உதாரணமாக, வேறுபட்ட குழுக்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் அரசு பாரபட்சம் காட்டுதல். சில நேரங்களில் உரிமைகள் மறுக்கப்படுவதனை விளைவாக ஏற்படுத்துகின்ற அளவிற்கு பாரபட்சம் மிக பாரதூரமானதாக அமையும், உதாரணமாக சில குழுக்களுக்கு சட்ட அடையாளத்திற்கான உரிமை மறுக்கப்படுதல் அல்லது வழிபாட்டுத் தலங்களைக் கட்டும் உரிமை மறுக்கப்படல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். மதம் அல்லது நம்பிக்கையின்

அடிப்படையில் அரசு செய்கின்ற பாரபட்சம் மத நடவடிக்கைகளை மட்டும் பாதிக்காது, மாறாக திருமணம், பிள்ளைகளின் பாதுகாவல் அல்லது வேலைவாய்ப்பு, வீடமைப்பு, நலன்புரி சேவைகள் அல்லது நீதி ஆகியவற்றிற்கான அணுகுதல் என்பனவற்றையும் பாதிக்கும்.

பல நாடுகளில் ஒரு நபரின் மதம் அவர்களின் அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சிறுபான்மையினர் தங்களது அடையாள அட்டையினைக் காண்பிக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களை பாரபட்சத்தினால் பாதிக்கப்படக்கூடியவர்களாக்குகின்றது.

இந்தோனேசியாவின் சில பகுதிகளில் உள்ள இந்துக்களின் திருமணங்களை அல்லது பிறப்புகளை பதிவு செய்வதற்கு உள்ளூர் அதிகாரிகள் மறுக்கின்றமையினால் அவற்றைப் பதிவு செய்துக் கொள்வதற்காக அவர்கள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. தேவாலயங்களை கட்டுவதற்கான அல்லது திருத்தங்களை செய்வதற்கான அனுமதியினைப் பெறுவதில் கிறிஸ்தவர்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. தேசிய நீதிமன்றங்கள் கிறிஸ்தவர்களுக்கு ஆதரவாக பலமுறை தீர்ப்பளித்துள்ளன. ஆனால், உள்ளூர் அதிகாரிகள் தீர்ப்புகளை புறக்கணிக்கிறார்கள், ஏனெனில், யசில சமயங்களில் அவர்கள் வன்முறையான தீவிரவாத குழுக்களுக்கு பயப்படுகிறார்கள்.

பாக்கிஸ்தானில் உள்ள பாரபட்சமான சட்டவாக்கமொன்று அஹ்மதிகள் தங்கள் நம்பிக்கை தொடர்பில் பிரசங்கிப்பது, பிரச்சாரம் செய்வது அல்லது பரப்புவதனை குற்றச் செயலொன்றாக்கியுள்ளது என்பதுடன் அவர்கள் வாக்களிக்கும் உரிமையையும் இழந்துவிட்டார்கள்.

நாட்டில் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் விளைவாக பாதுகாப்பு அதிகாரிகள் முஸ்லிம்களை பரவலாக குறிவைத்து, கூட்டு தண்டனைக்கு உட்படுத்தியுள்ளதாகவும், எதேச்சையான கைதுகள், சித்திரவதை, கொலைகள் மற்றும் காணாமல் போதல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் கென்யாவில் உள்ள மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்ற அதேவேளை, அரசாங்கம் இக்குற்றச்சாட்டினை மறுத்துவருகிறது.

மியான்மாரில் உள்ள இருபத்தி இரண்டு கிராமங்களில், உள்ளூர் பௌத்த் பிக்குகள் தங்கள் கிராமங்களை முஸ்லீம்களற்ற வலயங்களாக அறிவித்து, முஸ்லிம்கள் கிராமத்திற்குள் நுழைவதையோ அல்லது தங்குவதையோ தடுக்கும் அடையாள சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தியுள்ளனர். அத்துடன், அக்கிராமங்களின் குடியிருப்பாளர்கள் முஸ்லிம்களை திருமணம் செய்வதைத் தடுப்பதுடன் வெறுக்கத்தக்க பிரச்சாரங்களையும் பரப்புகிறார்கள். இதைத் தடுக்க அதிகாரிகள் எதுவும் செய்யவில்லை.

பெரும்பாலும் நபர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களுக்காக பரபட்சத்திற்குள்ளாகின்றனர். உதாரணமாக, மதம், மற்றும் இனம், பாலினம் அல்லது வர்க்கம் ஆகியவற்றின் அடிப்படையில் பாரபட்சத்திற்கு ஆளாகின்றனர். மனித உரிமைகள் தொடர்பான மொழிப் பிரயோகத்தின்படி, இது குறுக்குவெட்டு பாரபட்சம் என்று அழைக்கப்படுகிறது. இது பெண்கள், பழங்குடி மக்கள், இன சிறுபான்மையினர், ஓரினசேர்க்கை சமூகம், புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் போன்ற குழுக்கள் இலகுவாக மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல்களை அனுபவிப்பதனை சாத்தியப்படுத்துகின்றது.

குறுக்குவெட்டு பாரபட்சம் தொடர்பாக இந்தியாவிலிருந்து ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.

இந்து சாதி அமைப்பு என்பது ஒரு வகை நிலையான வர்க்க அமைப்பாகும். இது மக்களை உயர்ந்த மற்றும் தாழ்ந்த சாதிகளாகவும், தலித்துகள் போன்ற சாதியற்ற குழுக்களாகவும் பிரிக்கிறது. தலித்துகள் பெரும்பாலும் ஏழைகளிலும் ஏழ்மையானவர்கள் என்பதுடன் பாரிய சமூக மற்றும் பொருளாதார பாரபட்சங்களை எதிர்கொள்கின்றனர். இச்சாதிய அமைப்பு இந்து மதத்திலிருந்து தோன்றியிருந்தாலும், சாதி அமைப்பு முழு இந்திய சமுதாயத்திலும் உள்ளது. அனைத்து மத மக்களும் ஏதோவொரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். உதாரணமாக, பல இந்திய கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் தலித் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள்.

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது அரசாங்கம் சாதி முறையை தடைசெய்ததுடன், உடன்பாடான செயற்பாட்டு முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதனூடாக சாதிய பாரபட்சத்தினை எதிர்கொள்வதற்கு முயற்சித்தது. இம்முறைமை தலித்துகளுக்காக அரசாங்க பணிகளில் மற்றும் அரசுக்கு சொந்தமான உயர்கல்வி நிறுவனங்களில் குறித்த ஒதுக்கீடொன்றினை ஒதுக்கியதுடன் அவர்களுக்கு சில நலன்புரி சேவை நன்மைகளையும் வழங்கியது. இது மிகவும் நல்லது என்று ஒருவர் நினைக்கலாம். இருப்பினும், இந்த சலுகைகள், இந்து தலித்துகளுக்கும், சீக்கியர்களுக்கும் மற்றும் தலித் வம்சாவளியைச் சேர்ந்த பௌத்தர்களுக்கும் மட்டுமே வழங்கப்பட்டன. தலித் வம்சாவளியைச் சேர்ந்த கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம்களுக்கு இந்த நன்மைகள் மறுக்கப்படுகின்றன.

கிறிஸ்தவ மற்றும் முஸ்லீம் தலித்துகள் தங்கள் சாதி மற்றும் சிறுபான்மை மதம் காரணமாக சமூகத்தில் பாரபட்சத்தினை எதிர்கொள்கின்றனர். சாதி பாரபட்சத்தினை எதிர்ப்பதற்கான உடன்பாட்டு செயன்முறையிலிருந்து அவர்கள் விலக்கப்படுவதால், அவர்கள் தங்கள் மதத்தின் அடிப்படையில் அரசினாலும் பாரபட்சத்திற்கு ஆளாகியுள்ளனர். இது கிறிஸ்தவ மற்றும் முஸ்லீம் தலித்துகளின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

சுருக்கமாக: மதம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையில் நபர்களை பாரபட்சப்படுத்துவதற்கு அரசுகளுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. சமூகத்தில் இடம்பெறுகின்ற பாரபட்சத்தினைத் தடுப்பதற்கும் நிறுத்துவதற்கும் வினைத்திறனான முறையில் செயற்படுவதன் மூலம் மக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையும் அரசுகளுக்கு உண்டு.

பாரபட்சம் பல வடிவங்களில் இடம்பெறலாம் என்பதுடன் அது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் பாதிக்கும். பெரும்பாலும் நபர்கள் தங்கள் மதம் அல்லது நம்பிக்கை உள்ளடங்கலாக பல்வேறுபட்ட, இடைவெட்டு காரணங்களுக்காக பாரபட்சத்தினை எதிர்கொள்கின்றனர்.

பாரபட்சத்திலிருந்து பாதுகாக்கப்படுதல் தொடர்பாக குறிப்பிடுகின்ற மனித உரிமைகள் ஆவணங்கள் உள்ளடங்கலாக அது தொடர்பான மேலதிக ஆவணங்களை நீங்கள் இணையத்தளத்தில் உள்ள பயிற்சி ஆவணங்களில் காணலாம்.

Copyright: SMC 2018